பங்கேற்போம்! உரிமையை நிலைநாட்டுவோம்!!

ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச்சுற்றுக்கு மட்டும்

உயிர் : 01
குரல் : 02

அக்டோபர் 2023 – டிசம்பர், 2023




# குழந்தைகள் உரிமையும் மனித உரிமையே!

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்

**சிட்டெறும்பு பேசுது**

உயிர் : 01 | குரல் : 02

அக்டோபர் 2023 – டிசம்பர் 2023

ஆசிரியர்கள்

L. யுவராணி, H. யுவஸ்ரீ

இணை ஆசிரியர்கள்

S. ஜிஷ்ணு, K. நிஷாந்த்
G. விநாயகமூர்த்தி

உதவி ஆசிரியர்கள்

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி,
P. தமிழ், S. லோகேஷ்,
V. சுஜிதா, S. தங்கவித்யா,
S. சக்தி முருகன், R. கன்னியம்மா,
M. யுவராஜ்

நிருபர்கள்

S. நிவிஸ், A. ஹேமன்,
V. நாகராணி, M. ஷாகினா,
S. ஓவியா, D. ரொபினா,
M. ஜெனிலியா

ஓவியர்கள்

C. ஜெகன் S. ராபின்
V. நாகவள்ளி R. தேவன்

கௌரவ ஆசிரியர்

திரு. மோ.கணேசன்
நிர்வாக இயக்குநர், வாலு டிவி

நிர்வாகம்

முனைவர் வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

ஒருங்கிணைப்பு

திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல்
வழிநடத்துநர்

வழிநடத்துநர்

திரு. K. சுரேஷ்
விதை நெல் உறுப்பினர்

வடிவமைப்பு

துரை. அருணாச்சலம்

தொடர்பு முகவரி

அருணோதயா குழந்தைத்
தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு, இராயபுரம்,
சென்னை - 600 013.
Phone: 044 - 42632264
Mobile: 94440 51529 / 89252 74527

மின் அஞ்சல்

arunodhayaorg@gmail.com

இணையதளம்

www.arunodhayacentre.in



# ஆசிரியர் உரை

## நண்பர்களே வணக்கம்...

அனைவரும் நலம்தானே..! மிக்ஜாம் புயல் பாதிப்புகளில் நாம் சிக்கி இருந்தாலும் வெற்றிகரமாக நமது இரண்டாவது சிட்டெறும்பு இதழையும் வெளியிட்டுள்ளோம். உங்கள் படைப்புகளை மிகவும் சுவாரசியமாக எழுதியுள்ளீர்கள். உங்களனைவரின் ஒத்துழைப்பின்றி சிட்டெறும்பு இதழ் வெளிவருவது சாத்தியமில்லை. உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. சிட்டெறும்பு தவறாமல் வெளிவர தொடர்ந்து உங்கள் ஆதரவை அளிக்க வேண்டும்.

இந்த இதழ், குழந்தை உரிமை வாரத்தை மையக்கருத்தாக கொண்டு வெளிவந்துள்ளது. இன்றைய சூழலில் கோவிட்-19க்குப் பிறகு குழந்தைகள் உரிமை மீறல்கள் அதிகம் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாகக் கல்வி உரிமை, உயிர் வாழ்வதற்கான சுழல், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணங்கள், குழந்தை கடத்தல், பாலியல் வன்முறை, வறுமை, பட்டினி என இன்னும் ஏராளமான உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலை மாறி, குழந்தைகள் உரிமை மீதான உடன்படிக்கை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் அனைத்தும், குழந்தைகளுக்குப் பாரபட்சமின்றிக் கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தில், இந்தியா 1992ல் கையொப்பம் இட்டு 32 வருடங்கள் நிறைவடைந்த நிலையில், குழந்தைகள் அனைத்து உரிமைகளையும் பெற்றுள்ளனரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அரசு இதை கவனத்தில் கொண்டு, குழந்தைகள் உரிமைகளுக்கான சட்ட திட்டங்களை இயற்றி குழந்தைகள் உரிமையை உறுதி செய்ய வேண்டும் என கேட்டு கொள்கிறேன். மேலும் குழந்தைகளாகிய நம் பங்கு என்னவெனில், நம் உரிமை என்னவென்பதைப் புரிந்து கொண்டு அவற்றை பெறுவதற்கான திறன்களை வளர்த்துக் கொள்வதாகும்.

மேலும் எங்கள் இதழைப் படித்து, தங்களின் மேலான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட எங்கள் நண்பர்கள், பெற்றோர்கள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் அனைவருக்கும் எங்களின் பணிவான நன்றிகள்.

மேலும் எங்களுக்கு உறுதுணையாக இருந்து, எங்கள் கருத்துக்கு மதிப்பளித்து அனைத்து உதவிகளையும் செய்துவரும் எங்கள் இயக்குநர் முனைவர் வர்ஜில் டி சாமி அவர்களுக்கும் மற்றும் கௌரவ ஆசிரியராக இருந்து எங்களுக்கு வழிகாட்டி வரும் திரு மோ.கணேசன் அவர்களுக்கும் குழந்தைகள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

**லா. யுவராணி**
சிட்டெறும்பு இதழ் ஆசிரியர்

# குழந்தைகள் உரிமையும் மனித உரிமையே..!

### குழந்தைகள் என்றால் யார்?

குழந்தைகள் நாளைய சமுதாயத்தின் சிற்பிகள், சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தும் திறன் மிக்கவர்கள், புதுமையாக யோசிப்பவர்கள், சக்தி மிகுந்தவர்கள், சிந்தனை, செயல் போன்றவற்றை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துபவர்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்தவர்கள் குழந்தைகள்.

### குழந்தைகளின் தற்போதைய நிலை

இன்றைய குழந்தைகளின் நிலை நாம் அறிந்ததே. குழந்தைகளின் குழந்தைப் பருவம் மகிழ்ச்சியற்றதாகவும், பாதுகாப்பற்றதாகவும், குழந்தைகளுக்கான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலையும், குழந்தைகள் வாழ ஏற்ற உலகமாக இந்த உலகம் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. அதுமட்டுமின்றி, அவர்களுக்குக் கல்வி மறுக்கப்படுதல், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம், பாலியல் வன்முறை, பள்ளியிலிருந்து இடைவிலகல், பட்டினி, போதை உள்பட பல்வேறு பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு அவர்களின் சிந்தனை மற்றும் உணர்வுகள் நசுக்கப்பட்டு சக்தியற்றவர்களாக, திறனற்றவர்களாக உள்ளனர்.







### குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை சாசனம்

குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை சாசனமென்பது குழந்தைகள் கேட்பதைக் கொடுக்கும் ஒரு மந்திரப் புத்தகமாகும். அந்தப் புத்தகத்தில் குழந்தைகளுக்கான 41 உரிமைகளும் 53 விதிகளும் உள்ளன. வாழ்வதற்கான உரிமை, வளர்வதற்கான உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்பு உரிமை ஆகிய நான்கு பெரும் பிரிவுகளில் உரிமைகள் அனைத்தும் அடங்கி உள்ளன.

குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை சாசனம் விதி 12-இல், **“தனது சொந்தக் கருத்துகளை உருவாக்கிக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த எந்த ஒரு குழந்தையும் அக்கருத்துக்களை, தன்னை பாதிக்கும் எல்லா விஷயங்களிலும் தைரியமாகவும், தாராளமாகவும் எடுத்துரைக்க உரிமை உண்டு. அக்கருத்துக்களுக்கு உரிய முக்கியத்துவமும், கவனமும் அளிக்க வேண்டியது அவசியம்”** என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை மையமாக வைத்து குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை சமூகத்தில் உறுதி செய்யும் நோக்கத்தோடு எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்கம் செயல்பட்டு வருகிறது.

### குழந்தைகளின் உரிமை வாரம்

1924ல் ஏற்படுத்தப்பட்ட குழந்தைகள் குறித்த ஜெனிவா பிரகடனம் 1989 நவம்பர் 20 அன்று ஐநா பொதுக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சர்வதேசக் கூட்டு ஒப்பந்தத்தில் இந்தியா 1992ல் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டது. இதைக் கொண்டாடும் விதமாக **குழந்தைகள் தினமான நவம்பர் 14 முதல் நவம்பர் 20 உலக குழந்தைகள் தினம் வரை உள்ள ஏழு நாட்கள் குழந்தைகள் உரிமை வாரமாக கொண்டாடப்படுகிறது**. நமது அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பிலும் நவம்பர் 14 முதல் 20 வரை, குழந்தைகள் உரிமை வாரத்தை குழந்தைகள் அனைவரும் சேர்ந்து கொண்டாடி மகிழ்வது வழக்கம்.



H. யுவஸ்ரீ, 11-ஆம் வகுப்பு

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு மாநாடு
# மற்றும்
# உலக குழந்தைகள் தின விழா -2023

## இணையதள பாதுகாப்பு குழந்தைகள் உரிமை

**நாள்:** 19.11.2023 | **நேரம்:** 10 am - 4 pm | **இடம்:** AIR **சமுதாயக்கூடம், எண்ணூர்**

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு மாநாடு மற்றும் உலக குழந்தைகள் தின விழாக் கொண்டாட்டம், 'இணையதள பாதுகாப்பு குழந்தைகள் உரிமை' என்ற மையக்கருத்தை மையமாகக் கொண்டு நடைபெற்றது. இந்த மாநாட்டில் 300 குழந்தைகள் கலந்து கொண்டனர். காலை வருகைப் பதிவு முதல் இறுதியாக தேசிய கீதம் வரை குழந்தைகள் உற்சாகமாகப் பங்கேற்றனர். இம்மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



காலை நிகழ்ச்சியாக சங்கப் பாடல், வரவேற்பு நடனம், வரவேற்புரை, குழந்தைகளின் அனுபவப் பகிர்வுகள், ஆண்டு அறிக்கை, சிறப்பு விருந்தினர்களின் வாழ்த்துக்கள் என நிகழ்ச்சி களைகட்டியது. நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக மிகவும் பிரமாண்டமாக 'சிட்டெறும்பு பேசுது' இதழ் வெளியீட்டு விழா மற்றும் 'பிழை' குறும்படம் வெளியீட்டு விழா மற்றும் மனித சங்கிலி அமைந்தது. மதிய உணவிற்குப் பிறகு அனைத்து குழந்தைகளும் வந்து அமர்ந்தனர். "அனைவரும் ரெடியா?" என்று நிகழ்ச்சி தொகுப்பு குழந்தைகள் கேட்டனர். குழந்தைகளும் "நாங்கள் இதற்குத்தான் காத்திருந்தோம்" என்று கூறினார்கள். சிலம்பாட்டம், ஒயிலாட்டம், நாடகம், டான்ஸ் என அனைத்து கலைநிகழ்ச்சிகளையும் மகிழ்ச்சியுடன் கண்டுகளித்தனர்.

முன்னாள் குழந்தைகள் சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசு கொடுத்தோம். ஒரு நாள் மாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்தினோம். மாநாட்டில் நடந்த ஒவ்வொரு நிகழ்வையும் குழந்தைகளாகிய நாங்கள் மூன்று மாதங்களுக்கு முன்பே திட்டமிட்டு இருந்தோம். அதன்படி வெற்றிகரமாக நடத்தி முடித்தோம்.






# எங்களின் கோரிக்கைகள்


- ஆபத்தான விளையாட்டுகள் (பப்ஜி, ஃப்ரீ பயர், ஃப்ளூவேல்), இணையதள சூதாட்டம் போன்ற விளையாட்டுகளை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.
- இன்ஸ்டாகிராமில் கணக்கு துவங்க வேண்டுமெனில் 18 வயது நிரம்பியதற்கான ஆவணங்களைக் கொடுக்க வேண்டும்.
- குழந்தைகள் கணக்குகளின் பாதுகாப்புக் கொள்கையில் குழந்தைகள் பாதுகாவலர், அல்லது பெற்றோர்கள் போன்ற 2 பெரியவர்களை (Adult) Tag செய்யும் முறையினை அமைத்தல் வேண்டும்.
- பெற்றோர்கள் குழந்தைகளுக்கு கைப்பேசியை கொடுக்கும்போது 'பெற்றோர் கட்டுப்பாடு முறை' பயன்படுத்த வேண்டும்.
- கூகுள் ஆப் மற்றும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வயது சான்று அளிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். அதனை முறையாகக் கண்காணிக்க வேண்டும்.
- குழந்தைகள் வாட்சப் மற்றும் இதர செயலியில் புரொபைல் போட்டோ வைக்கும் முறையை முற்றிலும் அகற்ற வேண்டும்.
- 18 வயதிற்கு கீழே உள்ள குழந்தைகள், இணையத்தைக் குறிப்பிட்ட நேரம் வரை மட்டுமே பயன்படுத்தக்கூடிய வகையில் செயலிகள் அமைக்கப்பட வேண்டும்.
- குழந்தைகளை ஆன்லைனில் வன்முறைக்கு உள்ளாக்கிய குற்றவாளிகளுக்கு சட்டப்படி தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும்.
- உருவத்தை மாற்றி அமைப்பது, குரலை மாற்றி அமைப்பது போன்ற செயலிகள் தடை செய்யப்பட வேண்டும்.
- தகுந்த காரணமின்றி செல்போன் நெட்வொர்க் நிறுவனங்கள் முகவரி மற்றும் லொக்கேஷன் அறியும் வசதியை நீக்க வேண்டும்.
- டேட்டிங் செயலி, விளையாட்டு செயலிகளில் தனி மெசேஜ் அறை வசதி உண்டு. இந்த செயலிகளை குழந்தைகளும் பயன்படுத்துகின்றனர். இதனால் குழந்தைகளுக்குப் பாலியல் சுரண்டல்கள் நடைபெற அதிக வாய்ப்பு உள்ளது. இந்தச் செயலிகளை முற்றிலும் தடை செய்யவேண்டும்.
- குழந்தைகளுக்கான கணக்குகளில் (Account) வலுவான சமூகத் தரநிலைகள் மற்றும் குழந்தைகளுக்கான உள்ளடக்க குறியீடுகள் இருக்க வேண்டும்.
- பொருத்தமற்ற உள்ளடக்கத்தைத் தேடுதல் மற்றும் சந்தேகத்திற்கிடமான செயலில் ஈடுபட்டுள்ள கணக்குகளை கொடியிடுதல் (FLAG) வேண்டும்.
- குழந்தைகளின் பாதிப்புகள், சூழ்நிலைகள், டிஜிட்டல் திறன்களைக் கருத்தில் கொண்டு, இணையதளத்தில் குழந்தைகளை பாதுகாக்கும் சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் ஏற்படுத்தி குழந்தைகள் பாதுகாப்பை அரசு உறுதி செய்திட வேண்டும். ■



**K. நிஷாந்த், 9-ஆம் வகுப்பு**




**தமிழில் பிழையில்லாமல் எழுதும் பயிற்சி எங்களுக்கு அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம் மூலமாக கொடுக்கப்பட்டது. எங்களுக்கு இதழியல் பயிற்சி அளித்த, 'சிட்டெறும்பு பேசுது' இதழின் கௌரவ ஆசிரியராக இருக்கும் திரு.மோ.கணேசன் அவர்கள்தான், இந்த பயிற்சியையும் நடத்தினார். அவரோடு இணைந்து எங்கள் அருணோதயா ஆசிரியர்களும் வழிநடத்தினார்கள். பதினெட்டு குழந்தைகள் இதில் கலந்து கொண்டோம்.**




**முதலில் தமிழ் எழுத்துகளை ஒலிக்கும் மாத்திரை அளவு எங்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது.**

**மாத்திரையின் அளவு**

தமிழ் எழுத்துக்களை உச்சரிக்க எடுக்கும் கால அளவை மாத்திரை என்பார்கள்.

குறில் எழுத்துக்கள் - 1 மாத்திரை

நெடில் எழுத்துக்கள் - 2 மாத்திரை

மெய் எழுத்துக்கள் - 1/2 மாத்திரை

ஆயுத எழுத்து - 1/2 மாத்திரை

**'ந' 'ண' 'ன' உச்சரிப்பு முறை மற்றும் எழுதும் முறை**

'ண' எனும் எழுத்தை அழுத்தி உச்சரிக்க வேண்டும், 'ன' எனும் எழுத்தை மென்மையாக உச்சரிக்க வேண்டும். 'ந' எனும் எழுத்தை அழுத்தமாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் நடுத்தரமாக உச்சரிக்க வேண்டும்.

'நலம்', 'நாடு' என்ற வார்த்தைகளை 'ணலம்', 'னாடு' என்று எழுதுவது தவறாகும். ஏனென்றால் 'ண', 'ன' ஆகிய எழுத்துகள் எப்போதும் வார்த்தைகளின் தொடக்கத்தில் வராது. 'ந', 'நா' என்ற எழுத்துகள் வார்த்தையின் தொடக்கத்திலும் வரும். இடையிலும் வரும்.

(எ.கா) 'நகரம்', 'நாடு' என்று தொடக்கத்திலும், 'பொதுநலம்', 'மாநாடு' ஆகிய வார்த்தைகளின் இடையிலும் வருவதைக் காணாலாம்.

**'ற' 'ர' உச்சரிப்பு முறை**

'ற' என்ற எழுத்தை அழுத்தி உச்சரிக்க வேண்டும். 'ர' என்னும் எழுத்தை சாதாரணமாக உச்சரிக்க வேண்டும்.

'ற' வரிசை எழுத்துக்கள் எப்போதும் முதலில் வருவது இல்லை மற்றும் 'ற்' என்னும் வல்லின மெய் எழுத்துக்கு அடுத்ததாக மற்றொரு மெய் எழுத்து வருவது இல்லை.

(எ.கா ) 'ஏற்போம்' என்ற வார்த்தையை 'ஏற்ப்போம்' என்று எழுதுவது தவறு.



**‘ல’ ‘ள’ ‘ழ’ உச்சரிப்பு முறை**

‘ல’ என்னும் எழுத்தை சாதாரணமாக உச்சரிக்க வேண்டும் .

‘ள’ என்ற எழுத்தை, நாக்கை உள்ளுக்குள் பாதியளவு வளைத்து உச்சரிக்க வேண்டும்.

‘ழ’ என்ற எழுத்தை, நாக்கை நன்றாக உள்ளுக்குள் வளைத்து உச்சரிக்க வேண்டும்.

**எழுதும் முறை**

இந்த மூன்று எழுத்துக்களில் ‘ல’-வைத் தவிர மற்ற இரண்டு எழுத்துகள் எப்போதும் ஒரு சொல்லின் முதல் எழுத்தாக வராது.

(எ.கா) ‘லட்டு’, ‘லட்சம்’

**நான் கற்றுக்கொண்டவை**

நான் இந்த பயிற்சியின் மூலம் தமிழில் பிழையின்றி எழுதப் பயிற்சி செய்து பழகிக் கொண்டேன். அதனால், நான் எழுதும்போது பிழைகள் ஏற்பட்டாலும் அவற்றைக் கண்டறிந்து திருத்திக் கொள்கிறேன். இந்த பயிற்சி எனது படிப்புக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. என் நண்பர்களுடன் இந்த பயிற்சி குறித்து பகிர்ந்து கொண்டேன். அவர்களுக்கும் நான் சொல்லித் தந்தேன்.

**இறுதியாக தமிழ் மொழியின் சிறப்பு குறித்து நான் அறிந்தவை!**

உலகத்தில் முதல் முதலாக உருவான மொழி தமிழ் மொழி. தமிழ் மொழியை பல புலவர்கள் வளர்த்து உள்ளனர்.

(எ.கா) திருவள்ளுவர், ஔவையார், கம்பர், பாரதியார், பாரதிதாசன் என இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். சில புலவர்கள் தமிழ் மொழியில் இதிகாசங்களையும், தமிழ் மொழியை வாழ்த்தி வாழ்த்துப் பாடல்களையும் எழுதியுள்ளனர்.



இப்படிப்பட்ட தமிழ் மொழியை நாம் பிழையின்றி எழுதவும் பேசவும் பழகுவோம். ■

**S. ஜிஷ்ணு, 8-ஆம் வகுப்பு**

# பிழை


## குறும்படம் உருவான வரலாறு

குழந்தைகள் சங்க மாநாட்டிற்காக குழந்தைகள் திட்டமிட்டனர். அதில் அவர்கள் இணையதளப் பாதுகாப்பு குறித்தும், இணையதளம் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் பேசிக்கொண்டு இருந்தனர். அப்போதுதான் இணையதளப் பாதுகாப்பு குறித்து ஒரு குறும்படம் எடுக்க வேண்டும் என முடிவு செய்தோம்.

அதற்கான கதை எழுதி அருணோதயா இயக்குனரிடம் ஒப்புதல் வாங்கி படப்பிடிப்பு இடம், நடிகர்கள், எந்த நாள் எடுக்கப் போகின்றோம் என முடிவு செய்து, அருணோதயா மூலம் அதற்கான பொருளாதார உதவி பெற்று, படப்பிடிப்பை ஆரம்பித்தோம். நடிகர்களை நடிக்க வைப்பது, குரல் கொடுத்தல், திருத்துதல் என்று நாங்கள் பணி செய்ய ஆரம்பித்தவுடன்தான் எங்களுக்கு நிறைய அனுபவங்கள் கிடைத்தன. அனுபவங்களின் மூலம் நாங்கள் நிறைய கற்றுக்கொள்ள ஆரம்பித்தோம்.

நாங்கள் எடுத்த குறும்படத்தினை அருணோதயா யூடியூப் சேனலில் போஸ்ட் செய்தோம். 50 ஆயிரம் பார்வையாளர்கள் இந்தப் படத்தைப் பார்த்து எங்களைப் பாராட்டினார்கள். எங்கள் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்தது, எங்களுக்கு மகிழ்ச்சியாகவும் எங்களை ஊக்குவிக்கும் வகையிலும் இருந்தது. அருணோதயா பணியாளர்களும் எங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தனர்.

எங்களைப் போன்று திறமையானவர்களை இனம் கண்டு, எங்கள் மீது நம்பிக்கை வைத்து ஊக்குவித்து, வீடியோ எடுக்கத் தேவையான அனைத்து பொருட்களையும் வாங்கிக்கொடுத்து எங்கள் திறமையை, நாங்கள் அறிய வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்த அருணோதயா இயக்குனர் அவர்களுக்கு நன்றி. ■



**சாலமன்,**
**அருணோதயா சமூக ஊடகக் குழு உறுப்பினர்**

# ஆச்சரியமா இருக்கு, அதிசயமா இருக்கு நாங்களா எழுதினோம்

சிட்டெறும்பு பேசுது முதல் இதழ் குறித்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், சுய உதவிக் குழு நண்பர்களின் கருத்துகள் இங்கே...

**பெற்றோர்களின் கருத்துக்கள்**

நங்கள் எழுதிய கட்டுரைகளையும் கதைகளையும் படித்து ஆச்சரியப்பட்டார்கள். என் பிள்ளையும் புத்தகத்தில் வந்திருக்கிறார் என்று உறவினர்களிடம் காட்டி பெருமைப்பட்டார்கள். வேலை செய்யும் இடத்தில் காண்பித்து மகிழ்ச்சியானார்கள். சில பெற்றோர்களுக்குப் படிக்கத் தெரியவில்லை என்றாலும் அடுத்தவர்களிடம் கொடுத்து படிக்கச் சொல்லி, அதைக் கேட்டு மகிழ்ந்தனர்.




**ஆசிரியர்களின் கருத்துக்கள்**

நம் மாணவர்கள் புத்தகத்தில் வந்திருக்கிறார்கள் என்று ஆசிரியர்கள் மகிழ்ந்தனர். தலைமை ஆசிரியர்கள் பாராட்டினார்கள். இது குழந்தைகளை ஊக்கப்படுத்தும் என்று ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் கூறினார்கள். இந்த புத்தகம் வெளியில் விலைக்குக் கிடைக்குமா? அடுத்தமுறை நீங்கள் புத்தகம் எழுதினால் பள்ளிக்கு ஒரு புத்தகம் கொடுங்கள். நாங்கள் அதை எங்கள் நூலகத்தில் வைக்கிறோம் என்று கூறினார்கள். இது குழந்தைகளுக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது.

**சுய உதவிக்குழுவின் கருத்துக்கள்**

**திருமதி. சு.நிஷா, சுய உதவிக்குழு தலைவர்**

“சிறுவயதில் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் உறுப்பினராக இருந்தபோது, நானும் ‘சிட்டெறும்பு பேசுது’ இதழ் ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்துள்ளேன். நாங்கள் இருந்ததுபோல் நீங்களும் இருக்கிறீர்கள். நீங்கள் இன்றைய இதழ் ஆசிரியர்கள் ஆகவும், நாளைய பயிற்சியாளர் ஆகவும் மாறலாம். உங்கள் புத்தகத்தில் எனக்கு பிடித்தது இதழாசிரியர் பயிற்சி, சிறுகதைகள், வண்ண ஓவியங்கள், இணையதள பாதுகாப்பு குறித்த கட்டுரை. இவற்றைப் படிக்கும்போது என்னுடைய சிறிய வயது நினைவுகள் வந்தது. மிகவும் பெருமையாக இருந்தது.”

இந்த பகிர்வுகளைக் கேட்கும்போது எங்களுக்கு மிகவும் பெருமையாகவும், தன்னம்பிக்கையாகவும் இருந்தது. உங்கள் அனைவரின் ஆதரவுடன் சிட்டெறும்பு இதழ் தொடர்ந்து வெளிவரும். ■



**சு.ஓவியா, 7-ஆம் வகுப்பு**

# பெண் கல்வியின் முக்கியத்துவம்

ஓர் ஆணிற்கு கிடைக்கும் கல்வி அவன் ஒருவனுக்கு மட்டுமே பயன்படும். ஆனால், ஒரு பெண் கல்வி பெற்றால், அக்கல்வி அவளுக்கு மட்டுமின்றி அவளைச் சுற்றி உள்ளவர்களுக்கும், அவளின் சந்ததிக்கும், அவளது குடும்பத்திற்கும் போய்ச்சேருகிறது.

**பெண் கல்வியின் பயன்கள்**

ஜான்சி ராணி, அகல்யா பாய், இந்திரா காந்தி, ஜெயலலிதா போன்ற பெண் தலைவர்கள் இந்தநாட்டை ஆட்சி செய்து வந்துள்ளனர். இக்காலத்தில் பெண்கள் கல்வி பெற்றதால் இன்றைய உலகில் ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் சாதனை படைத்து வருகின்றனர். கல்பனா சாவ்லா, அமுதா ஐஏஎஸ் என பல பெண்கள் உள்ளனர். பெண்களுக்கு கல்வி அறிவு கிட்டியதால் பெண்களும், ஆண்களுக்குச் சமமாக வருமானம் ஈட்டுகின்றனர். இதனால் இந்திய பொருளாதாரம் வளர்ச்சி பெற்றுள்ளது.

**பெண் புலவர்களின் சிறப்பு**

சங்க காலத்தில் நல்லதை எடுத்துக் கூறிய புலவர்களில் ஔவையார், வெண்ணிக் குயத்தியார், காவற்பெண்டு நப்பசலையார், பொன்முடியார் போன்ற பெண் புலவர்களும் உள்ளனர்.

**பெண் கல்விக்காகப் பாடுபட்டவர்கள்**

மகாகவி பாரதி, கர்ம வீரர் காமராசர் போன்ற பல தலைவர்களால் பெண்களுக்கு கல்வி கிடைக்கப்பெற்றது. நாடு மற்றும் வீட்டின் முன்னேற்றம் மற்றும் பெண்களின் சுதந்திரத்திற்காகவும் பெண்கள் கல்வி அறிவு பெறவேண்டும். ■



**G. லட்சுமி பிரியா, 8-ஆம் வகுப்பு**

# சென்னை மாநகராட்சியில்

# குழந்தைகளின் குரல்

**ஒன்பதாவது வார்டு குழந்தை கவுன்சிலர் சுஹாஷினி, சென்னை மாநகராட்சியின் 3வது வார்டின் மாமன்ற உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்களை சந்தித்து உரையாடினார். அந்த உரையாடல் இங்கே...**



**சுஹாஷினி:** ஐயா! வணக்கம்! உள்ளே வரலாமா?

**தமிழரசன்:** வாங்க! உங்களை நான் முன்பே பார்த்திருக்கிறேனே!

**சுஹாஷினி:** ஐயா! நான் அருணோதயா குழந்தைகள் நகர சபையில் இருந்து வருகின்றேன். நான் நகரசபை வார்டு குழு பிரதிநிதியாக இருக்கிறேன்.

எங்கள் நகரசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு எங்களுக்கு ஆதரவு அளித்து வருகின்றீர்கள். அதற்காக உங்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தமிழரசன்:** உங்கள் நகரசபைக் கூட்டத்தில் நான் தவறாமல் கலந்து கொள்வேன். ஏனென்றால் குழந்தைகள் அனைவரும் மிக அழகாகவும், தெளிவாகவும் தங்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்து என்னிடம் சமர்ப்பிப்பார்கள். அந்த நிகழ்வு எனக்கு மிகவும் பிடிக்கும்.

**சுஹாஷினி:** ஐயா! நாங்கள் கொடுத்த கோரிக்கைகளில் நீங்கள் என்னென்ன கோரிக்கைகளை நிறைவேற்றி உள்ளீர்கள் என்பதை எங்களிடம் பகிர்ந்து கொள்ள முடியுமா?

**தமிழரசன்:** சாலை வசதி, வேகத்தடை, ஆரோக்கியமான அங்கன்வாடி, பள்ளியில் கண்காணிப்பு கேமரா இது போன்று நீங்கள் கொடுத்த கோரிக்கைகளில் சிலவற்றை நிறைவேற்றி உள்ளேன்.

**சுஹாஷினி:** எங்கள் குழந்தைகள் நகரசபை செயல்பாடுகள் எப்படி இருக்கிறது?

**தமிழரசன்:** குழந்தைகள் நகரசபை செயல்பாடு மிகவும் சிறந்த செயல்பாடு. குழந்தைகளுக்குத் தேவையான விஷயம் என்னவென்று அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கிறது. எங்களுக்கும் உதவியாக இருக்கிறது.

**சுஹாஷினி:** மிகவும் நன்றி ஐயா! குழந்தைகள் உரிமை குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**தமிழரசன்:** குழந்தைகள் உரிமைகள் மிகவும் அவசியமான ஒன்று. குழந்தைகளின் கல்வி, பாதுகாப்பு மிகவும் அவசியமான ஒன்று. பாதுகாப்பு குறித்து அதிகமான விழிப்புணர்வுகள் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

**சுஹாஷினி:** பெரியவர்கள் மாநகரசபை கூட்டத்திற்கு எங்களை அழைத்து சென்று காண்பிக்க முடியமா?

**தமிழரசன்:** சென்னை மாநகராட்சிக் கூட்டங்களில் கட்டாயம் கலந்து கொள்ளலாம். ஆனால் தற்போதைய சூழ்நிலை சரியில்லை. கட்டாயம் முன்பதிவு செய்து நான் அழைத்து செல்கின்றேன். தற்சமயம் வெளியில் இருந்து பார்க்கலாம். அதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

**சுஹாஷினி:** ஏதேனும் வாய்ப்பு கிடைத்தால் எங்களை கண்டிப்பாக அழைத்துச் செலுங்கள். எனக்கு நேரம் ஒதுக்கி பேட்டி கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



**M.சுஹாஷினி, 11-ஆம் வகுப்பு**

# குழந்தைகள் சங்கத்தின் மூன்று மாத செயல்பாடுகள்

அக்டோபர் 2023 – டிசம்பர் 2023

## கூட்டங்கள்

- குழந்தைகள் சங்கத்திற்காக மாதம் ஒரு கூட்டம் வீதம் மூன்று கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. அதில் பேசப்பட்டத் தலைப்புகள்.

  அக்டோபர்: நீ எதை தேடுகிறாயோ அது உன்னைத் தேடுகிறது.
  நவம்பர்: பலம், மாநாடு செயல்பாடுகள்.
  டிசம்பர்: பலவீனம், மாநாடு மதிப்பீடு.



- CACS கூட்டமைப்புக் கூட்டம் 08/10/23 அன்று நடந்தது. இக் கூட்டத்தில் மாநாடு திட்டமிடல் நடந்தது.




- பள்ளியில் தனது பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் அக்டோபர் மாதம் பள்ளி குழந்தைகள் மன்ற கூட்டங்கள், ஐந்து பள்ளிகளில் நடைபெற்றன.



- 26/11/23 அன்று பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு (FCMRP) இளம் வழிநடத்துனருக்கான இணைய வழிக்கூட்டம் நடைபெற்றது. இதில் H.யுவஸ்ரீ, K.நிஷாந்த் கலந்து கொண்டனர்.

- டிசம்பர் 3/12/2023 அன்று பங்கேற்பு இயக்கங்களின் கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டம் இணைய தளம் வழியாக நடைபெற்றது.




---

## பங்கேற்பு

- 06/10/23 அன்று, சென்னை பெருநகர மாநகராட்சி திருவொற்றியூர் ஹைவே ரோடு சீரமைப்புத் திட்டத்திற்கான குழந்தைகளின் கருத்துக்கணிப்புக் கூட்டத்தில், சங்கத்தின் குழந்தைகள் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களைக் கூறினார்கள்.




- லயோலா கல்லூரியில் 'குழந்தைகள் கொண்டாட்டம்' என்ற நிகழ்வு, 07/10/23 அன்று நடைபெற்றது. அதில் 60 குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி பரிசும் வென்றனர்.



## கொடுத்து மகிழ்வோம்

07/10/23 முதல் 10/10/23 வரை அருணோதயா குழந்தைகள் சங்கம் மற்றும் பெண்கள் சங்கங்கள் இணைந்து 'கொடுத்து மகிழ்வோம்' நிகழ்ச்சியை நடத்தி மகிழ்ந்தனர்.

- எண்ணூரில் உள்ள ஒரு குழந்தையின் அப்பா புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். அவருக்கு, 'கொடுத்து மகிழ்வோம்' நிகழ்ச்சியின் மூலம் குழந்தைகள் சங்கத்தினர் ஒரு சிறிய நன்கொடையைக் கொடுத்து மகிழ்ந்தனர்.
- கொருக்குப்பேட்டை குழந்தைகள் சங்கத்தின் மூலமாக முதியோர்களுக்கு உணவு, புடவை வழங்குதல் மற்றும் கலை நிகழ்வுகள் நடத்தி மகிழ்ந்தார்கள். திருவொற்றியூரில் பெண்கள் சங்கத்துடன் இணைந்து 25 முதியவர்களுக்கு மதிய உணவு, புடவை கொடுத்து முதியவர்களுடன் நேரத்தை செலவழித்தனர். இராயபுரம் குழந்தைகள் சங்க குழந்தைகள் தங்கள் பகுதியில் உள்ள முதியோர்கள் 25 பேருக்கு புடவைகளைப் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தனர்.



---

- அக்டோபர் மாதம் பரத நாட்டியப் பயிற்சி பெற்ற குழந்தைகளுக்கு சலங்கை பூஜை நடைபெற்றது.



## விழிப்புணர்வு நிகழ்வுகள்

- உலகப் பெண் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு, 11/10/23 அன்று திருவொற்றியூர், கொருக்குப்பேட்டை, ராயபுரம் ஆகிய மண்டலங்களில் பொதுக்கூட்டம் மற்றும் ஊர்வலம் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பகுதி மக்கள் விழிப்புணர்வு அடைந்தனர்.



## ஆதரவு திரட்டுதல் மற்றும் வழக்காடுதல்

- இணையதள பாதுகாப்பு என்ற தலைப்பில் 9/11/23, 10/11/23, 11/11/23 ஆகிய தேதிகளில் திருவொற்றியூர், எண்ணூர், கொருக்குப்பேட்டை, இராயபுரம் ஆகிய மண்டலங்களில் மாதிரி மாநாடு நடைபெற்றது. இதில் ஊர்த் தலைவர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், காவல் ஆய்வாளர்கள், இளைஞர்கள், பணியாளர்கள், பெண்கள் சங்க தலைவிகள் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு ஆதரவு அளித்தனர்.





- நவம்பர் 19 குழந்தைகள் சங்க மாநாடு நடைபெற்றது. இதில் 300 குழந்தைகள் கலந்து கொண்டு அவர்களின் கோரிக்கைகளை சிறப்பு விருந்தினர்களிடம் சமர்ப்பித்தனர்.

---

## கற்றல்

- அக்டோபர் மாதம் குழந்தைகள் மனநலம் குறித்து சிறப்பு வகுப்புகள் கொருக்குப்பேட்டை, திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் எட்டு வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்றது. இதில் 60 குழந்தைகள் பயன்பெற்றனர். இதன்மூலம், குழந்தைகளின் மனநலம் சார்ந்த வகுப்புகள் செயல்பாடுகள் மூலம் நடைபெற்றது.



- டிசம்பர் 16 மற்றும் 17 தேதிகளில் மனநலம் குறித்த சிறப்பு வகுப்புகள் திருவொற்றியூர் குழந்தைகள் சங்க மாணவர்களுக்கு நடத்தப்பட்டன. எட்டு வகுப்பிலும் குழந்தைகள் ஆர்வமாகப் பங்கேற்றனர். உதவி, கருணை, நன்றி, தன்னம்பிக்கை ஆகிய நான்கும் குழந்தைகளை சிறந்த மனநிலையில் வைத்திருக்கும். இது குறித்து சிறுகதைகள், விளையாட்டுகள், கலை நிகழ்வுகள் போன்றவை குழந்தைகளுக்குக் கற்று கொடுத்ததில் குழந்தைகள் சிறந்த மனநலம் உடையவர்களாக விளங்க வாய்ப்பாக அமைந்தது.

---

## மிக்ஜாம் புயலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அருணோதயாவின் உதவிகள்

- டிசம்பர் மாதம் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பங்களுக்கு பாய், பெட்ஷீட், மளிகை பொருட்கள், ஷெல்ட்டர் கிட், கல்வி உபகரணங்கள், சல்வார், பிஸ்கட்ஸ், நாப்கின் போன்றவை கொடுக்கப்பட்டது.




இந்த உதவிகள் 5000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் உதவியதற்கு நன்றி தெரிவித்தனர்.



- இவையே எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் மூன்று மாத செயல்பாடுகளாகும். எங்களின் செயல்பாடுகள் தொடரும். தொடர்ந்துகொண்டே இருக்கும். எங்கள் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் அனைவருக்கும் நன்றி. ■



**R. கன்னியம்மா, நர்சிங்**

சிறுகதை



# குட்டி முயலின் முடிவு!

ஓர் அடர்ந்த காட்டில் அப்பா முயலும், குட்டி முயலும் வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் அப்பா முயல் சொன்னது "நம்மை வேட்டையாடுவது மிகவும் கடினம். அதற்குக் காரணம் வேகமாக ஓடும் திறன் நமக்கு உள்ளது. அதனால்தான் நம்மை யாராலும் வேட்டையாட முடியவில்லை. ஆனால், நமக்கு வேகமாக ஓடும் திறன் இருக்கிறது என்பதற்காக நாம் அடர்ந்த காட்டிற்குள் செல்லக்கூடாது. அங்கு சென்றால் ஆபத்து அதிகமாக இருக்கும்" என்று கூறியது.

அப்பா முயல் கூறியதைக் கேட்டு, குட்டி முயல் ஏளனமாகப் பார்த்தது. "நான் மிகவும் வேகமாக ஓடுவேன். என்னை யார் என்ன செய்யப் போகிறார்கள்? நான் எல்லாரிடமும் தப்பித்து ஓடி வந்து விடுவேன்" என்று மனசுக்குள்ளே கூறிக் கொண்டது.

ஒரு நாள் வீட்டில் யாரும் இல்லாதபோது குட்டி முயல் அடர்ந்த காட்டிற்குச் சென்றது. அங்கு போகும் வழியில் பறவைகளின் சத்தம் கேட்டு ரசித்துக் கொண்டே சென்றது.

சிறிது தூரம் சென்றதும் ஒரு புலி அந்த வழியே வந்தது. புலியைக் கண்ட குட்டி முயல் ஒரு புதரில் மறைந்து கொண்டது. அதனுடைய இதயம் திக்திக் என்று அடித்துக்கொள்ள, புலி நம்மைப் பார்க்கக்கூடாது. நாம் புலியிடமிருந்து தப்பிக்க வேண்டும் என்று நினைத்தபடி, 'கடவுளே என்னை எப்படியாவது காப்பாற்று' என்று வேண்டிக்கொண்டது. சிறிது நேரம் கழித்து புலி அங்குமிங்கும் பார்வையிட்டபடியே அந்த இடத்தை விட்டுச் சென்றது.

புதரைவிட்டு மெதுவாக வெளியே வந்த குட்டி முயல், வீட்டிற்குச் செல்லலாம் என்று நினைத்தது. அப்போதுதான் தெரிந்தது, அதன் வீட்டிற்குப் போக வழி தெரியவில்லை என்று.

அங்கிருந்து எப்படிப் போவது என்று தெரியாமல் சிந்தித்துக் கொண்டே நடந்து வந்தபோது, தூரத்தில் சிங்கம் கர்ஜிக்கும் சத்தம் கேட்டது. 'ஐயோ நாம் செத்தோம். இனி சிங்கம் வாயில் நாம மாட்டிக்கொண்டு சாகத்தான் போகிறோம்' என நினைத்தபடி, எந்த பக்கம் சத்தம் வந்ததோ அதற்கு எதிர்ப்பக்கமாக குட்டி முயல் ஓடியது.

அந்தப் பக்கம் ஒரு யானை சென்று கொண்டிருந்தது. 'அய்யோ? யானையா? அந்த யானை ஒரே மிதியில் என்னைக் கொன்றுவிடுமே? என்ன செய்வது? இந்த பக்கம் சிங்கம். அந்த பக்கம் யானை. நான் எப்படித் தப்பிப்பது? வேறு பக்கமாக சென்று தப்பித்துக் கொள்ளலாம்' என்று நினைத்து ஓடும்போது, அங்கு ஆறு ஓடி கொண்டிருந்தது.

'ஐயோ! இந்தப் பக்கம் ஆறு இருக்கிறது. நாம் தவறாக வந்து விட்டோம். நாம் அந்தப் பக்கம் செல்லலாம்' என்று அந்தப் பக்கம் செல்ல ஆரம்பித்தது. அந்தப் பக்கம் போகும்போது ஒரு வேட்டைக்காரன் அந்த முயலைப் பார்த்து அம்பு விடுவதற்காக குறி பார்த்துத் தயாராக இருந்தான்.

உடனே முயல் கத்தியது. "இனி நான் சாவது உறுதி. சாவது உறுதி" என்று கத்தியது. உடனே அது கண் விழித்து சுற்றும் முற்றும் பார்த்தது. சத்தம் கேட்டு ஓடி வந்த அப்பா முயல், "என்ன... என்ன சாவது உறுதி என்று கத்துகிறாய்? கனவு ஏதும் கண்டாயா?" என்று பதட்டத்துடன் கேட்டது.

சுய நினைவிற்கு வந்த குட்டி முயல், தான் வீட்டில் உள்ளதை உணர்ந்தது. நாம் அடர்ந்த காட்டிற்கு செல்ல வேண்டும் என்று நினைத்தோமே. அங்கு இத்தனை அபாயம் உள்ளதா? "அப்பா... நீங்கள் சொன்னதை மதிக்காமல், காட்டுக்குள் போக வேண்டும் என்று நினைத்தேன். என் கனவில் காட்டுக்குள் என்னென்ன ஆபத்துக்கள் இருக்கிறது என்பதைக் கண்டுகொண்டேன். என் தவறை உணர்ந்து விட்டேன். இனி காட்டுக்குள் செல்லமாட்டேன் அப்பா. என்னை மன்னித்து விடுங்கள்" என்றது. ■



L. யுவராணி, 11-ஆம் வகுப்பு

# ஆழமான, அழகான அனுபவம்

என் பெயர் தேவயானி. நான் ஒரு வருடமாக அருணோதயாவில் பணியாற்றி வருகிறேன். நான் வளரிளம் பருவக் குழந்தைகளுக்கு ஊக்குனராகப் பணியாற்ற வந்தேன். நான் இங்கு வந்தபோது, குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும் என்றும் பெற்றோருடன் எப்படி பேச வேண்டும் என்றும் தயக்கமாக இருக்கும். அப்போது அருணோதயா மூலம் எனக்குக் கிடைத்த பயிற்சிகளால் என் திறன்களை வளர்த்துக்கொள்ள முடிந்தது. குழந்தைகளிடமும் பெற்றோர்களிடமும் தைரியமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசவைத்து என்னை ஒரு பணியாளராக உருவாக்கிய பெருமை அருணோதயாவுக்கே சேரும்.

குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளில் அவர்களை கலந்துகொள்ள ஊக்குவித்து, ஒரு வழிகாட்டியாகவும் இருந்துள்ளேன். போதைப் பொருட்கள் அதிக விற்பனை நடைபெறும் பகுதியைக் கண்டறிந்து, அந்தப் பகுதியில் விழிப்புணர்வு வீதி நாடகம் நடத்தி, குழந்தைகளை போதையில் இருந்து வெளிக்கொண்டுவர வழிவகை செய்தோம். அந்த விழிப்புணர்வு வீதி நாடகத்தில் நானும் ஒரு நடிகராகப் பங்கேற்றது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கல்வியின் முக்கியத்துவத்தை குழந்தைகளுக்கு எடுத்துக்கூறி அவர்களை கல்வி கற்க வழிவகை செய்தோம். குழந்தைகள் பங்கேற்பைப் பார்க்கும்பொழுது பெற்றோர்கள் எங்களுக்கு நன்றி கூறுவார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். இடை விலகல் குழந்தைகளை கண்டுபிடித்து, அவர்களின் கல்வி நிலையை அறிந்து, வேறு பள்ளியில் சேர்த்ததால், அவர்கள் இப்பொழுது நன்றாக படித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னால் எட்டு குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க முடிந்தது. இந்த அளவுக்கு நான் வளர்ந்ததற்குக் காரணம் அருணோதயா எனக்குக் கொடுத்த பயிற்சிதான். இயக்குனர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. ■



**தேவயானி,**
**அருணோதயா பணியாளர்**

# விதை நெல்

கற்றதை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதிலும் ஒரு இன்பம் இருக்கிறது. அந்த வகையில் நாங்கள் குழந்தைகள் சங்கத்திலிருந்து கற்றுக் கொண்டதே, நாங்கள் வாழ்வில் மேம்பட முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. பல பயிற்சிகளின் மூலம் நாங்கள் எங்கள் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் சிறப்பாய், சிரிப்பாய் இருக்க முதன்மைக் காரணம் குழந்தைகள் சங்கம். எல்லா குழந்தைகளும் எப்போது நாங்கள் பெரியவர்கள் ஆவோம் என்று யோசிப்பார்கள். ஆனால் குழந்தைகள் சங்கத்தில் இருக்கும் குழந்தைகளோ ஏன் 18 வயதாகிறது என்று யோசிப்பார்கள்? காரணம் குழந்தைகள் சங்கத்தின் பயிற்சிகளில் பங்கேற்க முடியாமல் போகும் என்பதால். அப்படி 18 வயதாகி கல்லூரி, வேலை, வாழ்க்கை என இருந்த எங்களை, மீண்டும் இருபதாம் ஆண்டு குழந்தைகள் சங்க மாநாட்டின் மூலம் இணைத்து, 'விதை நெல்' என்ற குழுவை உருவாக்கி மீண்டும் குழந்தைகளுடன் பயணிக்க வாய்ப்பு அளித்திருக்கும் நிர்வாக இயக்குனருக்கும் திட்ட ஒருங்கிணைப்பாளருக்கும் இந்நேரத்தில் என் நன்றி.

எங்கள் வாழ்வே குழந்தைகள் சங்கத்தால்தான் என்று சொன்னால் மிகை ஆகாது. குழந்தைகள் சங்கத்தின் மூலம் நாங்கள் இன்று சமூகத்தின் பல அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்கும் அல்லது தீர்வு காணும் இடத்தில் வளர்ந்து நிற்கிறோம். பலர் திரைத்துறையிலும், பலர் சமூகப் பணியாளர்களாகவும், பலர் தொழில் முனைவோராகவும், பலர் தங்களின் குடும்பத்தின் வறுமை நிலையைப் போக்கியவர்களாகவும் வளர்ந்து இருப்பதற்கு அடிப்படைக் காரணம் குழந்தைகள் சங்கமும் அருணோதயாவும்தான்.

அந்த வகையில் மீண்டும் 'விதை நெல்' என்ற இக்குழுவின் மூலம், எங்களுடைய அனுபவங்களையும் நாங்கள் பயிற்சியால் பெற்ற பயன்களையும், தற்போதுள்ள குழந்தைகளுக்கு வழிகாட்டுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. தொடர்ந்து குழந்தைகளுடைய உரிமைகளை நிலை நாட்டுவதற்கு எங்களின் பங்களிப்பு இருக்கும். இதன் மூலம் வளமான சமூகம் அமையும் என்பதில் துளியும் ஐயமில்லை. ■



**K. சுரேஷ் நாத்**

# எனது பகுதி எனது பொறுப்பு

மிக்ஜாம் புயலின்போது பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து குழந்தைகள் இளைஞர் இயக்கங்களின் பகிர்வுகள்





சடையங்குப்பம் கிராமத்தில் மிக்ஜாம் புயல் வெள்ள பாதிப்பின்போது, நீரால் ஆகாயத் தாமரைகள் பகுதியை சூழ்ந்தன. இந்த பாதிப்பின் பொழுது அந்த கிராமத்தில் வசிக்கும் அனைத்து இளைஞர்களும் சேர்ந்து ஆகாயத்தாமரை செடிகளை அகற்றினார்கள். படகு மற்றும் துடுப்புகளைக் கொண்டு ஆகாயத் தாமரைகள் அகற்றி, மழை நீர் செல்வதற்காக வழி வகுத்தார்கள். ஆகாயத் தாமரைகளை அகற்றும்போது அந்த இளைஞர்களின் உடம்பில் கொடிகள் சூழ்ந்து கொண்டன. கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளும் தாக்கின. விஷப்பூச்சிகளும் தாக்கின. அப்பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்க, அதே பகுதி இளைஞர்களெல்லாம் இணைந்து உயிரை துச்சமாக எண்ணி இப்பணியை செய்து முடித்துள்ளார்கள்.

இதை அங்குள்ள இளைஞர்கள் ஒன்று கூடி செய்ததால், அப்பகுதியில் வெள்ள நீர் தேங்காமல் அப்பகுதியைப் பாதுகாத்துக் கொண்டனர். அதுமட்டுமின்றி இப்பகுதி மக்கள், குழந்தைகள் அனைவருக்கும் தேவைப்படும் உணவுப் பொருட்களையும் நிவாரணப் பொருட்களையும் அவ்வப்பொழுது அருணோதயாவின் உதவியால் கொண்டு வந்து சேர்த்ததில் அப்பகுதி இளைஞர்களுக்கு பெரும்பங்கு உண்டு.

இதுகுறித்து சத்யா என்பவரிடம் கேட்டதற்கு, “எங்கள் பகுதி இளைஞர்களின் கூட்டு முயற்சியே ஆகாயத்தாமரை அகற்றியது. எங்களுக்கு நிவாரணம் கிடைக்க உதவிய அருணோதயா பணியாளர்களுக்கும் ஜோதி மிஸ் அவர்களுக்கும் நன்றி” என்றார். ■

# எங்கள் வாழ்வாதாரத்தை பறித்த மிக்ஜாம் புயல்





நான் சடையன் குப்பம் பகுதியில் வாழும் இருளர் இனத்தைச் சேர்ந்தவள். என் பெற்றோர்கள் மீன் பிடித்தல், பூச்சி பிடித்தல், மீன் விற்றல் போன்ற தொழில்களைச் செய்து, அதில் வரும் வருமானத்தில்தான் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். அண்மையில் ஏற்பட்ட மிக்ஜாம் வெள்ளப் பெருக்கினால், என் ஊரான சடையன் குப்பம் பகுதி பாதிக்கப்பட்டு கன்னி வலை, தள்ளு வலை, வீட்டு உபயோகப் பாத்திரங்கள், தொலைக்காட்சி, ஐஸ் பெட்டி, மீன் வைக்கும் பெட்டிகள், தையல் மெஷின் போன்ற அனைத்தும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. இவை எங்களின் வாழ்வாதாரத்தைப் புரட்டி போட்டது. மீண்டும் இவற்றையெல்லாம் வாங்க நிறைய செலவாகும். அருணோதயா மூலமாக புத்தகப்பை, ரேசன் பொருட்கள், லஞ்ச் பாக்ஸ், சல்வார் போன்றவை எங்கள் பகுதி குழந்தைகளுக்குக் கிடைத்தது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இவை அனைத்தையும் நான் மையமாக வைத்து என் ஓவியத்தில் வரைந்திருக்கிறேன். ■



ரேணுகா, 8-ஆம் வகுப்பு

# இயற்கை தந்த இன்னல்

நான் சென்னையில் உள்ள கொருக்குப் பேட்டையில் வசித்து வருகிறேன். மிக்ஜாம் புயலால் பெய்த மழையில் அனைத்து பகுதிகளிலும் தண்ணீர் சூழ்ந்தது. பல பகுதிகளில் வீடுகளில் தண்ணீர் புகுந்தது. இதில் நிறைய பொருள்கள் சேதமாகின. மக்களின் வாழ்வாதாரமும், மிகவும் பாதித்தது. வீட்டில் தண்ணீர் புகுந்ததால் குளிர்சாதனப்பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், மாவரைக்கும் இயந்திரம், மிக்ஸி, சோபா, பீரோவில் வைத்திருந்த துணிகள், ஆவணங்கள் அனைத்தும் வீணாகியது.



மக்கள் சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டார்கள். பால் கூட கிடைக்கவில்லை. பால் விற்கும் இடத்தில் விலை அதிகமாக விற்றார்கள். வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பசியும் பட்டினியுமாகக் காத்துக்கிடந்தனர் மக்கள். வீட்டின் கீழே தண்ணீர் புகுந்ததால் மக்கள் மொட்டைமாடியில் தங்கினார்கள். மின்சாரம் இல்லாமல் போனது. டவர் இல்லாததால் போன் செய்ய முடியவில்லை. நனைந்த துணியுடன் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். உடுத்தக்கூட ஆடை இல்லை. தூங்க இடமில்லை. மழை நின்ற பின்பும் தண்ணீர் வடியவில்லை. ரொம்ப கஷ்டப்பட்டார்கள் மக்கள். மிக்ஜாம் புயலால் பெய்த மழையில் குழந்தைகளின் புத்தகம் மற்றும் நோட்டு புத்தகங்கள் வீணானது. மிக்ஜாம் புயல் அனைவருடைய வாழ்க்கையும் புரட்டிப்போட்டது. மக்கள் மருத்துவமனைக்குக்கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ■



Y. மதுமிதா, 8-ஆம் வகுப்பு

# யார் முக்கியம்?

சிறுகதை

பூமி ஒரு அற்புதமான கிரகம். சூரிய குடும்பத்திலேயே பூமியில் மட்டும்தான் உயிர்கள் வாழும் தன்மை இருக்கிறது. இந்த பூமியில் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐம்பூதங்கள் இருக்கின்றன.

ஒருநாள் ஐம்பூதங்களுக்கு இடையில், யார் முக்கியம் என்ற சண்டை வந்தது.

நீர் சொன்னது "என்னைத்தான் அனைவரும் குடிக்கிறார்கள். என்னைக் கொண்டுதான் சமைக்கிறார்கள். நான் இல்லை என்றால் உயிர்கள் இல்லை" என்றது.

அதைக் கேட்ட நெருப்போ, "இருட்டில் நான்தான் வெளிச்சம் தருவேன். சமைத்து சாப்பிடவும் நான்தான் தேவைப்படுகிறேன். அதனால் நான்தான் உயிர்களுக்கு முக்கியம்" என்று சொன்னது.

அதைக் கேட்டதும் காற்று சொன்னது, "என்னைத்தான் அனைவரும் சுவாசிக்கிறார்கள். நான் இல்லை என்றால் உயிர்கள் இல்லை. நான் தான் முக்கியம்" என்றது.

காற்று சொன்னதைக் கேட்டதும், நிலம் சொன்னது, "என் மீதுதான் அனைவரும் நிற்கிறார்கள். நான்தான் முக்கியம்" என்றது.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஆகாயம் "வாருங்கள். நாம் சண்டை போட்டு, நம்மில் யார் பலசாலி என்பதைத் தெரிந்து கொள்வோம்" என்றது.

முதலில் மண்ணும் நெருப்பும் சண்டை போட்டன. மண்ணைச் சுட்டு நெருப்பு வென்றது. வென்ற ஆணவத்தில் நெருப்பு இருந்தது. அப்போது நெருப்பும் நீரும் சண்டை போட்டன. நெருப்பை அணைத்து நீர் வென்றது. காற்றைப் பார்த்து நீர் சவால் விட்டது. அப்பொழுது காற்று புயலாக மாறி நீரைத் தூக்கிச் சென்றது. அடுத்து காற்றும் ஆகாயமும் சண்டை போட்டன. காற்றை மேகமாக்கி ஆகாயம் வென்றது.

அதன் பிறகு ஆகாயம் சொன்னது "நாம் அனைவருமே முக்கியம்தான். நாம் இல்லை என்றால் உயிர்கள் இல்லை. நம்மை வீணாக்கினால், வீணாக்குபவர்கள் அழிந்து விடுவார்கள். நாம் சண்டை போடாமல் நம் பணியினை செய்து ஒற்றுமையாக வாழ்வோம்" என்று கூறியது. நீரும், நிலமும், காற்றும், நெருப்பும் ஆகாயம் சொன்னதை ஒத்துக்கொண்டு தங்களது பணிகளைச் செய்தன. ■



S. ஜிஷ்ணு, 8-ஆம் வகுப்பு

# அரை லிட்டர் பால் 50 ரூபாய்க்கு வித்தாங்க

தண்டையார்பேட்டை ஒரு சில பகுதியில் மழையால் அதிக பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதனால் எங்களின் சூழ்நிலை மோசமாக இருந்தது. ஐந்து நாட்களாக மின் தடை ஏற்பட்டு இருந்தது. நம் குழந்தைகள் சங்க குழந்தைகளின் வீட்டிற்குள் தண்ணீர் சூழ்ந்தது. இதனால் அவர்களுக்கு உணவு, தண்ணீர். இருப்பிடம் ஆகியவை பாதிக்கப்பட்டு இருந்தன. எங்கள் நகரில் அரை லிட்டர் பாலின் விலை 50 ரூபாய் உயர்த்தப்பட்டிருந்தது.



ஒரு பால் பாக்கெட் கூட வாங்க முடியாத சூழ்நிலை அனைவருக்கும் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் நாங்கள் இருந்தபோதுதான், அருணோதயா எங்களை விசாரித்து உதவி செய்தது. எங்கள் சங்கக் குழந்தைகள் அனைவருக்கும் மளிகை பொருட்கள் வழங்கியது. இதனால் எங்கள் அருணோதயா குழந்தைகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். அது மட்டும் அல்லாமல் நாப்கின், உள்ளாடைகள் பெண் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. அவர்களின் வீடுகளில் என்ன பாதிப்பு ஏற்பட்டது என எங்கள் ஏரியா பணியாளர்கள் வந்து, எங்களை கண்காணித்து, எங்களுக்கு உதவி அளித்து மிக மகிழ்ச்சியாக இருந்தது. எங்களுக்கு உதவிய அருணோதயா குழந்தைகள் சங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



**L. யுவராணி, 11-ஆம் வகுப்பு**

# சாமி வந்து காப்பாத்துமா?

- பாடல்

செய்தியில் நாலு நாளு மழைன்னு சொன்னாங்க
அப்புறம் வரப்போகுது புயலுன்னு சொன்னாங்க
ஸ்கூல் காலேஜ் லீவுன்னு சொன்னாங்க
வெளியே சுத்தாத நோன்னு சொன்னாங்க

மழை வந்து வீட்டை கதவை சாத்திகிட்டோம்
குளிர்ல நடுங்கி பெட்ஷீட்ட போத்திகிட்டோம்
போனுக்கு சிக்னல் கிடைக்காமல் ஏங்கினோம்
இருட்டுல தூங்கினோம்.

காத்துல கூரைகள் பறந்து போச்சு
அங்கங்க வயர்கள் அறுந்து போச்சு
ரோட்டில் மரம் எல்லாம் சாஞ்சி போச்சு
குளம் குட்டைகள் எல்லாம் மறைஞ்சு போச்சு

மழையில சுத்துனா காத்துல தள்ளும்
ஏரி தண்ணி வந்து ரோடு எல்லாம் செல்லும்
காரணம் புயலுங்கோ
தாறுமாறா தத்தளிக்கும் சென்னைங்கோ
பெருமையா சொன்னீங்கோ
வீட்டுக்குள்ள தண்ணிங்கோ
பெருமையா சொன்னீங்கோ
வீட்டுக்குள்ள தண்ணிங்கோ

காத்து மாலையில காஸ்ட்லி காருங்க
தண்ணியில அடிச்சுட்டு போச்சு பாருங்க
ஏகப்பட்ட பேரு பசி பட்டினியால்
மழையில வாடி போச்சுங்க
சின்னமழை வந்தா கூட
எல்லாம் முழுங்கி போகுது
சாமி வந்து எங்கள
காப்பாத்துமா?



**M. ஷாம், 7-ஆம் வகுப்பு**

# The Importance of Kabaddi



Kabaddi is a contact team sports played between two teams of seven players, originating in ancient India. The objective of the game is for a single player on offence, referred to as a 'raider', to run into the opposing team's half of the court, touch out as many of their players as possible, and return to their own half of the court, without being tackled by the defenders in 30 seconds.

Points are scored for each player tagged by the raider, while the opposite team earns a point for stopping the raider. Players are taken out of the game if they are touched or tackled, and are brought back in for each point scored by their team from a tag or tackle.

It is popular in the Indian subcontinent and other surrounding Asian countries. Although accounts of Kabaddi appear in the history of ancient India, the game was popularised by a competitive sports in the $20^{th}$ century. It is the national game of Bangladesh.

It is the second most popular and viewed sport in India after cricket. It is played in Andhra Pradesh, Bihar, Chhattisgarh, Haryana, Karnataka, Kerala, Maharashtra, Orissa, Punjab, Tamilnadu, Telangana and Uttar Pradesh.

*( Source: Wikipedia)*



**S. Shakti Murugan, $10^{th}$ Std**

# My Scared Experience in Michaung



My name is P.Rishabh miracle. I am studying in St. Bede's Higher secondary School in $6^{th}$ standard. I am going to share my experience in Michaung cyclone. First of all I was very scared of it.

we had heavy rain for two days and no current in our area. We were surrounded by water. We din't have water for essential purpose. No proper food was available either.




**P. Rishabh Miracle, $6^{th}$ Std**

I am seeing all this for the first time in my life time and I can't even communicate to others what i went through. I din't know what was happening in other areas. After two days finally life came to normal but our fear remained.


M · SUHASHINI


M · SUHASHINI







**உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும் வாழ்த்துகளுடன் வரவேற்கிறோம்**